பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

1 யாரை நேசிக்கிறோம் என்பதில் எச்சரிக்கை 21

2 நபியின் சகவாசம் யாருக்கு? 24

3 நபியை நேசிப்பதில் நம்மிடமுள்ள பிரச்சினைகள் 33

4 நபிவழிக்கு முரணாக நபி நேசம் கூடாது 41

1

யாரை நேசிக்கிறோம் என்பதில் எச்சரிக்கை



நாம் யாரை நேசிக்கிறோம்? எச்சரிக்கை. நேசம் என்பது சும்மா வருவதில்லை. அதற்குக் காரணங்கள் இருக்கும். நாம் யாரையெல்லாம் நேசிக்கிறோமோ, அவர்களை ஏன் நேசிக்கிறோம் என்று சற்று நிதானித்து சிந்தியுங்கள். காரணங்கள் தெரிய வரும்.

நம்முடைய தாய் தந்தையை நேசிக்கிறோம். ஏன்? அவர்கள் நம்மைப் பெற்றெடுத்தார்கள்; பாசங்காட்டி வளர்த்தார்கள்; அக்கறையோடு பராமரித்தார்கள். நேசிக்கிறோம். அவர்களும் நம்மை நேசிக்கிறார்கள். ஏன்? பெற்றெடுத்த பாசம். இரத்த உறவு. கருணை. பிரதிபலன் பார்க்காத நம்பிக்கை. இதே இரத்த உறவும் பாசமும் நம்முடைய அண்ணண், தம்பி, அக்காள், தங்கைமீதும் இருக்கின்றன. நேசிக்கிறோம்.

நண்பர்களை ஏன் நேசிக்கிறோம்? அவர்களுடன் இரத்த உறவு இல்லாமல் இருந்தும்? முஸ்லிமைப் பொறுத்த வரை, அந்த நண்பர் ஒரு நல்ல முஸ்லிம் என்பதற்காகவே நேசிப்பார்.

இதைத் தவிர வேறு காரணங்கள், அதாவது, அவரும் நானும் ஒரே ஊர் என்றோ, அவரும் நானும் ஒரே பள்ளிக்கூடத்தில், ஒரே வகுப்பில் படித்தோம் என்றோ, ஒரே அலுவலகத்தில் பணிபுரிகிறோம் என்றோ காரணங்கள் இருந்தால், அது செல்லாது. அவர் நல்ல முஸ்லிமாக இருப்பது கட்டாயம். அவர் இறைமறுப்பாளர் என்றால், உளப்பூர்வமாக, சகோதரப் பாசத்தோடு நேசிப்பது தடைசெய்யப்பட்டது. பேசவோ, மனித நேயத்துடன் உதவி செய்யவோ தடை இல்லை. ஆனால், என் சகோதரா, சகோதரி என்று கலந்துறவாட அனுமதி இல்லை. சகவாசம்தான் குணத்தையும் கொள்கையையும் கெடுக்கிறது. இறைமறுப்பாளரின் குணங்களும் கொள்கைகளும் முஸ்லிமைப் பாதிக்கக் கூடாது என்கிற பின்னணியில் உள்ள அறிவார்ந்த சட்டம் இந்த இஸ்லாமியச் சட்டம்.

2

நபியின் சகவாசம் யாருக்கு?

❀

நமது சிறந்த நண்பர், நபி முஹம்மது ﷺ அவர்களின் சகவாசம் அவர்களின் தோழர்களுக்கு மட்டும்தானா? நமக்கு?

அதற்கும் வழி இருக்கிறது. அந்த வாய்ப்பு இப்போது இல்லை என்பது உண்மைதான். ஆனால், எதிர்வரும் காலத்தில் வாய்ப்புண்டு. எப்படி? மறுமையில். சொர்க்கத்தில். நிச்சயம் அவர்களைச் சந்திக்க முடியும். சகவாசம் கிட்டும். இப்போது நாமிருக்கும் நிலைமையில்தான் நபித்தோழர்களும் ஒரு காலத்தில் இருந்தார்கள். ஆம், நமது கண்மணி நாயகம் ﷺ முழுக்க கண்ணை மூடிவிட்ட சமயத்தில். இறந்துவிட்ட அவர்களை அடக்கம் செய்த பின்பு.

அப்போது அவர்களைப் பார்க்க முடியாமல், அவர்களோடு பேச முடியாமல், பழக முடியாமல் தவித்துப் போனார்கள் தோழர்கள், நம்மைப் போல.

இல்லை, நம்மைக் காட்டிலும் பல கோடி மடங்கு தவித்தார்கள். நேரில் கண்டு, பழகி, பேசிச் சிரித்து, அழுது உணர்வும் உயிருமாக உருகி உருகி நேசித்த அவர்களின் நேசத்தையும், நமது நேசத்தையும் ஒப்பிட முடியுமா என்ன? அப்படித்தான் தவிப்பையும் ஒப்பிட முடியாது. அனஸ் ؓ சொல்வதைக் கேளுங்கள்:

لَمَّا كَانَ الْيَوْمُ الَّذِي دَخَلَ فِيهِ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وسَلَّمَ الْمَدِينَةَ أَضَاءَ مِنْهَا كُلُّ شَيْءٍ فَلَمَّا كَانَ الْيَوْمُ الَّذِي مَاتَ فِيهِ أَظْلَمَ مِنْهَا كُلُّ شَيْءٍ وَمَا نَفَضْنَا عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وسَلَّمَ الأَيْدِيَ حَتَّى أَنْكَرْنَا قُلُوبَنَا

அல்லாஹ்வின் தூதர் மதீனாவில் நுழைந்த அன்று, அந்த நகரில் இருந்த எல்லாப் பொருள்களும் ஒளிமயமாக இருந்தன. அவர்கள் மரணித்த நாளிலோ, அதிலிருந்த எல்லாப் பொருள்களும் இருளடைந்து போயின. அவர்களை அடக்கம் செய்துவிட்டு,

4

நபிவழிக்கு முரணாக நபி நேசம் கூடாது

❀

ஷைத்தான் யாரை எப்படி வழிகெடுக்கலாம் என்று தெரிந்தவன். நபியை வெறுக்கத் தூண்டுவதின் மூலம் இறைமறுப்பாளர்களை வழிகெடுக்கிறான். நபியை நபிவழிக்கு முரணாக நேசிக்கத் தூண்டுவதின் மூலம் முஸ்லிம்களை வழிகெடுக்கிறான். நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இன்று முஸ்லிம்களைப் பல வழிகளில் அவன் கெடுத்து வருகிறான். குறிப்பாக, நபிவழிக்கு முரணான நம்பிக்கைகளையும் சம்பிரதாயங்களையும் உருவாக்கிவிடுகிறான். நிறைய முஸ்லிம்கள் அவற்றை மார்க்கமாக நம்பிக்கொண்டு பின்தொடர்கிறார்கள். அவற்றில் சில உதாரணங்களை இனி கவனிப்போம்:

1. நபியின் பெயரால் சொல்லப்படும் பொய்களைக்கூட உண்மை என்று நம்புவது

நபியை நேசிப்பதாகச் சொல்லிக்கொண்டு இந்தப் பாவத்தைச் செய்கிறவர்கள் நிறைய பேர். இவர்கள் தங்களுக்கு எந்தச் செய்தி வந்தாலும், அதில் நபி ﷺ அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தால், உடனே பரப்புகிறார்கள். அது உண்மையா பொய்யா என்று விசாரிப்பதோ, அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதோ இல்லை. துணிந்து அதை மற்றவர்களிடம் சொல்கிறார்கள். வாட்ஸ் அப், டெலிகிராம், ஃபேஸ் புக் போன்ற செய்தி ஊடகங்களில் பகிர்கிறார்கள்.

இந்த நேசம் குருட்டுத்தனமானது மட்டுமல்ல, அபாயகரமானது. இட்டுக்கட்டிய செய்திகளையும் கதைகளையும் நபியின் பெயரால் பரப்புவது, அவர்களை அவமதிப்பதுதானே தவிர நேசிப்பது ஆகாது. தன்னைப் பற்றிப் பொய்யான செய்திகள் பரவுவதை உண்மையாளரும் உண்மைப்படுத்தப்பட்டவருமான நம்முடைய நபி விரும்புவார்களா? சிந்திக்கவும்.